# யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை - அருங்காட்சியக ஆவணப்படுத்தல்

## அறிமுகமும் பின்புலமும்

நூலக நிறுவனமானது இலங்கைத் தமிழ்பேசும் சமூகங்கள் தொடர்பான எல்லா வகையான அறிவுத் தொகுதிகளையும் மரபுரிமைகளையும் ஆவணப்படுத்திப் பாதுகாத்து இலவசமாகத் திறந்த வெளியில் அனைவரும் பயன்பெறும் வகையில் கிடைக்கச்செய்யும் முக்கிய பணியை மேற்கொள்ளும் இலாப நோக்கமற்ற நிறுவனமாகும். 2005 முதல் திறந்த, கூட்டுச் செயற்பாட்டை முன்னிறுத்திச் செயற்பட்டு வரும் நூலக நிறுவனம் இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான ஒரு முதன்மையான உசாத்துணைத் திரட்டினை உருவாக்கியுள்ளது. பல்வேறு செயற்றிட்டங்கள் மூலம் ஆவணப்படுத்தற் பணிகளை முன்னெடுத்து வருகிறது.

அச்சு ஆவணங்களின் எண்ணிம வடிவங்கள் www.noolaham.org வழியாகவும் பல்லூடக ஆவணங்கள் www.noolaham.media வழியாகவும் திறந்த வெளியில் அனைவருக்கும் இலவசமாக வழங்கப்படுகின்றன. எழுத்தாவணங்களில் நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், சிறுநூல்கள், மலர்கள், நினைவு மலர்கள் ஆகியனவும் பல்லூடக ஆவணங்களில் ஒளிப்படங்கள், வாய்மொழி வரலாறுகள், பல்லூடக ஆவணங்கள், ஒலிப்பதிவுகள், காணொலிகள், கையெழுத்து ஆவணங்கள், குறுங்கால ஆவணங்கள், கல்வி வளங்கள் போன்றனவும் உள்ளடங்குகின்றன. இந்த ஆவணங்கள் பல்வேறு சிறப்புச் சேகரங்களாகவும் ஆய்வுப்பொருட் சேகரங்களாகவும் தொகுக்கப்பட்டுக் காட்சிப்படுத்தப்படுகின்றன.

## செயற்றிட்ட அறிமுகம்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இலங்கையின் வடக்கே யாழ்ப்பாண நகரில் உள்ள ஒரு அரசு மருத்துவமனையாகும். இது வடக்கு மாகாணத்தின் முன்னணி மருத்துவமனையாகவும், கொழும்பில் மத்திய அரசால் கட்டுப்படுத்தப்படும் மாகாணத்தின் ஒரே மருத்துவமனையாகவும் உள்ளது. இந்த மருத்துவமனை வடக்கு மாகாணத்தில் உள்ள ஒரே போதனா மருத்துவமனையாகும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கான பிரதான மருத்துவ கற்பித்தல் வசதி இந்த மருத்துனையில் உள்ளது. பொது மருத்துவ மற்றும் அறுவைசிகிச்சை பராமரிப்புடன், இதயவியல், நீரிழிவு நோய், பல் மருத்துவம், தோல் மருத்துவம், குடும்பக் கட்டுப்பாடு, மகளிர் மருத்துவம், நரம்பியல், மகப்பேறியல், புற்றுநோயியல், கண் மருத்துவம், ஈ.என்.ரி, குழந்தை மருத்துவம் மற்றும் உளநோய் மருத்துவம் உள்ளிட்ட பல்வேறு வகையான சுகாதார சேவைகளை மருத்துவமனை வழங்குகிறது. இந்த மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவு, அதி-தீவிர சிகிச்சைப் பிரிவு, முன்கூட்டிய குழந்தை பிரிவு, ஒரு ஆரம்ப சுகாதார பிரிவு, நோயியல் ஆய்வகம் மற்றும் இரத்த வங்கி சேவை ஆகியவை உள்ளன. இவ்வாறு பல சேவைகளை வழங்கும் தனித்துவமான நிறுவனமாக விளங்கும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையையும், அங்குள்ள அருங்காட்சியகத்தில் காணப்படும் அனைத்து ஆவணங்களை பாதுகாப்பதும் மிக முக்கியமாகும்.

## செயற்றிட்ட நோக்கம்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை வட இலங்கையின் யாழ்மாவட்டத்தில் புகழ்பெற்ற தனித்துவமான வைத்தியசாலையாக திகழ்கின்றது. இச் செயற்றிட்டத்தின் மூலம் இவ் வைத்தியசாலை மற்றும் அங்குள்ள அருங்காட்சியகத்தில் காணப்படும் அனைத்து விடயங்களையும் ஆவணப்படுத்தி, பாதுகாத்து எதிர்கால சந்ததிக்கு கையளிக்கவும், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தொடர்பான அனைத்து அம்சங்களையும் இணையத்தளத்தில் திறந்த வெளியில் இலவசமாக அனைவரும் பார்த்து பயனடைந்து கொள்ளச்செய்வதும் இவ் ஆவணப்படுத்தலின் முக்கிய நோக்கமாகும்.

## செயற்றிட்ட அடைவுகள்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மற்றும் அங்குள்ள அருங்காட்சியகத்தில் காணப்படும் அனைத்து விடயங்களையும் கண்டறிந்து ஆவணப்படுத்துவதன் மூலம் வைத்தியசாலையின் ஒட்டுமொத்த வரலாறும், வைத்தியசாலையின் வரலாற்றோடு தொடர்புடைய ஆளுமைகளை அடையாளம் கண்டு அவர்களின் வாய்வழி வரலாறும் பதிவுசெய்யப்பட்டு ஆவணமாக்கி பாதுகாக்கப்படும். அத்தோடு, நூலக நிறுவனத்தினூடாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மற்றும் அங்குள்ள அருங்காட்சியகத்தில் காணப்படும் பூரணமான விடயத்தை இணையத்தளம் மூலமாக பார்வையிடுவதற்கான அணுகல் வசதி அனைவருக்கும் இலவசமாக ஏற்படுத்திக்கு கொடுக்கப்படுவதோடு, அவை எதிர்கால சந்ததியிடம் பாதுகாப்பாக கொண்டு சேர்க்கப்படும்.

## செயற்றிட்ட காலவரையறை

இச் செயற்றிட்டமானது ஒரு வருட காலப்பகுதியைக் கொண்டுள்ளது. இக்காலப்பகுதிக்குள் வைத்தியசாலை தொடர்பான வரலாறு, வைத்தியசாலையால் ஆற்றப்பட்ட பணிகள் அப் பணிகளை இன்று வரை எடுத்துச் சென்று கொண்டிருக்கிற நபர்கள் பற்றிய வாய்மொழி வரலாறுகள், மற்றும் வைத்தியசாலையில் பணியாற்றியோரது வாய்மொழி வரலாறுகள் என்பவை ஆவணப்படுத்தப்பட்டு இச்செயற்றிட்டத்தின் நோக்கம் பூரணப்படுத்தப்படும்.

## எதிர்பாக்கப்படும் செலவீனம்
**LKR 4,657,574**

மேலதிக விபரங்களுக்கு
**https://docs.google.com/spreadsheets/d/1AKawT6TUJngsNqaIigpdR5Gm4PiZ6FnAWUw4YVRSM8A/edit#gid=1017615132**